செ.வெ.எண்.465 11.08.2009

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 15.8.2009 அன்று நடைபெறவுள்ள சுதந்திர தின விழாவின்போது, காலை 8.30 மணிக்கு சென்னை, தலைமைச்செயலக கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைப்பார்கள்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதிகள், மத்திய, மாநில அமைச்சர்கள் மற்றும் அனைத்து அழைப்பாளர்களும் சுதந்திர தினவிழாவில் கலந்துகொள்வதற்கு ஏதுவாக தலைமைச் செயலகத்திற்கு எதிரில் உள்ள மைதானத்தில் இதற்கென சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள படியடுக்கு மேடையில் (Gallery) இருக்கை வசதி செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15.8.2009 அன்று காலை 8.25 மணிக்கு கோட்டை கொத்தளத்தின் முன்பாக உள்ள அணிவகுப்பினையும் பொதுமக்கள் மற்றும் அழைப்பாளர்களையும் சுற்றில் வந்து பார்வையாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்து பின்னர் தலைமைச் செயலக உள் நுழைவாயில் வழியாக கோட்டை கொத்தளத்தை வந்தடைவார்கள். அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வரவேற்று, அங்கு ஏற்கனவே குழுமியுள்ள ஆந்திரா, தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் கேரளா பகுதி தலைமைத் தரைப்படைத் தலைவர், சென்னை கடற்படை பொறுப்பு அதிகாரி, தாம்பரம் வான்படை அதிகாரி, கடலோர காவல் படை கமாண்டர் (கிழக்கு மண்டலம்), காவல் துறை இயக்குநர், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) மற்றும் சென்னை மாநகரக் காவல்துறை ஆணையாளர் ஆகியோரை தலைமைச் செயலாளர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 8.30 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி வைப்பார்கள். அதன்பின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுதந்திரத் திருநாள் உரை நிகழ்த்துவார்கள். பின்னர் துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருது மற்றும் ஊனமுற்றோர் நலனுக்காக சிறப்பாகத் தொண்டாற்றியவர்களுக்கான விருதுகளை வழங்குவார்கள். பின்னர் கோட்டை நுழைவாயில் அருகே உள்ள பந்தலில் அமர்ந்துள்ள ஊனமுற்ற குழந்தைகளுக்கு இனிப்பு வழங்குவார்கள்.

சுதந்திர தின விழா நிகழ்ச்சிக்கு வாகனங்களில் வருகை தரும் அழைப்பாளர்களின் வசதிக்காக சிவப்பு மற்றும் நீலம் ஆகிய இரண்டு வண்ணங்களில் வாகன அனுமதி அட்டைகள் வழங்கப்படும். சிவப்பு நிற வாகன அனுமதி அட்டைகள் உள்ள வாகனங்கள் போர் நினைவுச் சின்னம் வழியாக வந்து கோட்டை கொத்தளத்தின் முன்னால் முக்கிய அழைப்பாளர்கள் அமர இருக்கை அமைக்கப்பட்டுள்ள பகுதியில் விருந்தினர்களை இறக்கியபின், வாகனத்தை உள் நுழைவு வாயில் வழியாக தலைமைச் செயலகத்தின் உள்ளே உள்ள வளாகத்தில் நிறுத்திக் கொள்ளலாம். நீல நிற அனுமதி அட்டை பெற்ற வாகனங்கள் ரிசர்வ் வங்கி சுரங்கப்பாதை வழியாகவோ அல்லது கோட்டையின் செயின்ட் ஜார்ஜ் வாயில் வழியாகவோ வந்து இராஜாஜி சாலையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு மாடத்தை வந்தடைய வேண்டும். சிறப்பு மாடத்தின் அருகே அழைப்பாளர் இறங்கிக்கொண்டதும் இந்த வாகனங்களை தலைமைச்செயலகத்திற்கு எதிரே அமைந்துள்ள வாகன நிறுத்தப் பகுதியில் நிறுத்திக் கொள்ளல் வேண்டும்.

அழைப்பாளர்களின் வசதிக்காக, தலைமைச் செயலக வளாகத்திலும் அதேபோல் தலைமைச்செயலகத்திற்கு எதிரே உள்ள கார் நிறுத்தப் பகுதியிலும் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களை ஒலிபெருக்கி மூலமாக அழைத்திட ஒலி அழைப்பு வசதி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் அனைத்து வாகனங்களின் இயக்கத்தையும் முறைப்படுத்தி எவ்வித இடையூறும் இல்லாத வகையில் சீரான போக்குவரத்து வசதிகள் போக்குவரத்துக் காவல் துறையினரால் முறைப்படுத்தப்படும்.

இந்த சுதந்திர தின விழா நிகழ்ச்சியில் அனைவரும் திரளாகப் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

தேவ. ஜோதி ஜெகராஜன்
அரசு செயலாளர்.

/உண்மை நகல்/

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

2

இரா. இராஜேஷ் 7/8/09
பிரிவு அலுவலர்.

KE
7.8.09